தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௲௬	மலர்
சக	ராக்ஷஸ, வைகாசி	உ
	(1975 — மே — ஜூன்)	

"பாரதிதாசனின் புரட்சி உள்ளம்"

இராம. சுப்பிரமணியன், M A; B. Lib. Sc; B. G. L.

4-B, தீத்தாரப்ப முதலி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5.

மாற்றம் ஏற்படுமானல் அதுவே புரட்சி ஆகிறது சமூகத்தில் ஏற்பட்டிருக்கும் சமூக ஏற்ற தாழ்வுகள். பெண்மையின் புறக்கணிப்பு; உழைப்பாளி உரிய முறையில் முக்கியத்துவம் கொடுக்காத நிலை; இவைகளின் நிலைமை மாற வேண்டும் என்று கவிஞர் விரும்பினர். ஒவ்வொரு துறையிலும் புரட்சிகரமான செய்திகளை, புதுமையான முறையில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வெளியிடுகின்ருர்.

ஒரு கவிஞனுக்கு உணர்ச்சி மட்டும் போதாது வாழ்க்கையை நன்ருக உணர்ந்திருக்க வேண்டும். பண்பட்ட உள்ளம், அறிவு செறிந்த மனம், எல்லாவற்றையும் அறியும் கற்பனை இவையாவும் இலக்கியப் படைப்புக்கு இன்றியமையாதவை.

கவிதை என்பது வெறும் ஓசை இன்பம் மட்டுமல்ல; அதில் ஒரு பொருளிருக்கிறது; உணர்ச்சி இருக்கிறது. வாழ்க்கையின் நேர்மையைக் காட்டக் கூடிய ஓர் அம்சமிருக்கிறது. எல்லாம் அதில் திகழ்கிறது

கவிஞர் அவர்களுடைய கவிதைகளில் புரட்சிகரமான கடவுட் கொள்கை, சாதி எதிர்ப்பு, பெண் கல்வி, பெண்ணடிமை, மறுமணம், சமூகத்தில் ஏற்ற தாழ்வுகள், பகுத்தறிவு, குடும்பக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு புரட்சிகளையும் தீட்டிச் செல்லுகின்ருர். இக்கட்டுரையில் அவருடைய ஒரு சில கருத்துக்களை மட்டும் காண்போம்.

கடவுட் கொள்கை

தமிழ் இனத்தவர்க்குச் சாதியினை ஏற்படுத்தி, கோவில்களில் தமிழ் நுழையாதபடி ஆக்கி, தமிழர்களில் ஒரு பிரிவினரைக் கோவிலுக்குள் அனுமதிக்காத அவல நிலைக்குப் புரட்சிக் கவிஞரால் கண்டனக் குரல் எழுப்பாது இருக்க முடியவில்லை

உள்ள தொரு தெய்வம் — அதற்
குருவ மில்லை தம்பி [1]

என்று கூறுகின்றார் மேலும்

ஒன்றே அல்லால் குலமில்லை
ஒருவனே அல்லால் தெய்வமில்லை [2]

என்றும்,

ஒருகடவுள் உண்டென்போம்
உருவணக்கம் ஒப்போம்!
உள்ளபல சண்டையெலாம்
ஒழியும் மதமொழிந்தால் [3]

என்றும்,

ஓர் கடவுள் உண்டு — தம்பி [4]

என்று 'ஏற்றப் பாட்டி'ல் கவிஞர் தன்னுடைய கடவுட் கொள்கையினை மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

சமுதாயம் சீர்திருத்த வேண்டுமெனில் சமயபேதம் ஒழிய வேண்டும் என்ற கொள்கையினைக் கொண்டவர் கவிஞர். பெண் குழந்தை தாலாட்டுப் பாட்டில்,

எல்லாம் கடவுள் செயல் என்று துடைநடுங்கும்
பொல்லாங்கு தீர்த்துப் புதுமைசெய வந்தவளே [5]

என்று பெண் குழந்தையினைத் தாலாட்டுகிறார். சமயத்தினால் சமுதாயத்திற்குத் தீங்குதான் விளையும் என்ற திடமான நம்பிக்கை உடையவர் கவிஞர் குறிஞ்சித்திட்டில்.

---

1. பாரதிதாசன் கவிதைகள் மூன்றும் தொகுதி, ப 151.
2. தாயின்மேல் ஆணை.
3. பாரதிதாசன் கவிதைகள் மூன்றும் தொகுதி, ப 86.
4. மே கா. நூ. ப 151.
5. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப 128.

மதம் என்ற கருங்கற் பாங்கில் மல்லிகை
பூப்பதில்லை
மதியினில் மயக்கம் என்ற நஞ்சொன்றே மலரும்
நாட்டில்
புதியதோர் பொல்லாங் கென்னும் எரிமலை
புகையும் மக்கள்
இதுநலம் இதுதீ தென்னும் எண்ணமும்
இழந்து போவார்! [6]

என்று தம் கருத்தினை வலியுறுத்திப் பாடுகின்றார்.

மூடப்பழக்கங்கள்

சமுதாயத்தில் கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போக வேண்டும் எனப் பெரிதும் விழைகின்றார்.

மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்றோ? உயர்வதென்றோ? நானறியேன்! [7]

என்று பாடுகின்றார். ஒழுக்கம் இல்லாத பழக்க வழக்கங்களைச் கைக்கொள்ள வேண்டாம் என்றும் வெளிப்படுத்துகின்றார்.

வழக்கம் என்பதில் ஒழுக்கம் இல்லையேல்
கழுத்துப் போயினும் கைக்கொள்ள வேண்டாம் [8]

என்று உறுதியினை வெளிப்படுத்துகின்றார்.

தன்னேரிலாத தமிழ்ப் புலவன்!

பாரதிதாசனுக்குப் 'புரட்சிக் கவிஞர்' என்னும் பெயர் எவ்வாறு வந்தது? சங்கப் புலவர்கள் உவமையால் பெயர் பெற்றது போலப் பாரதிதாசனும் தாம் படைத்த 'புரட்சிக் கவி'

என்னும் காப்பியத்தில் இப்பெயர் பெற்றார், " இக்காவியத்தின் பெயரும் கருத்துமே கவிஞர்க்குப் 'புரட்சிக் கவி' என்ற பேரைப் பரப்பியிருக்க வேண்டும் " என்று கூறுகின்றார் டாக்டர் மு. கோவிந்தசாமி அவர்கள். [9]

---

6. குறிஞ்சித்திட்டு, ப. 123.
7. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப. 15.
8. மே. கா. நூ. இரண்டாம் தொகுதி, ப. 115.
9. டாக்டர் மு. கோவிந்தசாமி, பாரதிதாசன் கவித்திரன், ப. 86,

சாதி எதிர்ப்பு

சாதி ஒழித்தல், தமிழ் வளர்த்தல் என்ற இரு பணிகளுமே தமிழ் நாட்டைத் துலங்கச் செய்யும் நற்பணிகளாகும். இந்த இரண்டில் எதனை மறந்தாலும் நாடு துலங்காது முதலில் சாதியை ஒழித்த பின்னரே தமிழ் வளர்த்தல் பயன்தரும்.

சாதி ஒழித்திடல் ஒன்று — நல்ல
தமிழ் வளர்த்தல் மற்றொன்று
பாதியை நாடு மறந்தால் — மற்றப்
பாதி துலங்குவ தில்லை[10].

இவ்வரிகள் கவிஞரின் உள்ளக் கிடக்கையை உணர்த்துகின்றன. எனவே அவருடைய பாடல்கள் எல்லாவற்றிலும் சாதி எதிர்ப்புக் குரலைக் காணலாம்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்'[11] என்கின்றார் திருவள்ளுவர். அவர் வழி நின்று 'பிறவியில் உயர்வும் தாழ்வும் சொல்லல் மடமை'[12] என வலியுறுத்திப் பாடுகிறார் ஆண் குழந்தை தாலாட்டில் 'சாதியென்று போராடும் தக்கைகளின் நெஞ்சில் கனலேற்ற வந்த களிறே'[13] என்றும், பெண் குழந்தை தாலாட்டில் 'வேண்டாத சாதி இருட்டு வெளுப்பதற்குத் தூண்டா விளக்காய்த் துலங்கும் பெருமாட்டி'[14] என்றும் சாதியைச் சாடும் இடங்கள் கருத்தில் கொள்ளத் தக்கன. 'கடல்மேற் குமிழிகள்' என்னும் காவியத்தில்,

மிக்குயர்ந்த சாதி கீழ்ச்சாதி என்னும்
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை; தமிழர்க்கில்லை
பொய்க் கூற்றே சாதி எனல், ஆரியச்சொல்
புதுநஞ்சு! பொன் விலங்கு! பகையின் ஈட்டி.[15]

என்று சாதியின் கொடுமையைக் கடுமையாகச் சாடுகின்றார்.
' சமத்துவப் பாட்டு ' என்னும் தலைப்பில்.

---

10. பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி, ப. 81.
11. திருக்குறள், 972.
12. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப. 161.
13. மே. கா. நூ. ப. 125.
14. மே. கா. நூ. ப. 127.
15 பாரதிதாசன் கவிதைகள் மூன்றும் தொகுதி, ப. 57.

சேரிப் பறையர்என்றும்
 தீண்டாதார்என்றும் சொல்லும்
வீரர் நம் உற்றாரடி — சகியே
 வீரர் நம் உற்றாரடி ![16]

என்றும், 'ஆலய உரிமை தாழ்ந்தவர்க்கும் உண்டு' என்றும் கூறுகின்றார்.

இயற்கையில் புரட்சி உள்ளம்

இயற்கையினைக் கூர்ந்து நோக்கும் ஆற்றல் மிக்கவர் புரட்சிக் கவிஞர். கடலலைகளைப் பார்க்கும் கவிஞர் அவர்கட்கு இளைஞர் தம் எழுச்சியும் நெகிழ்ச்சியும் ஒருங்கே நினைவுக்கு வருகின்றன.

நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும்; வீழும்
புரண்டிடும், பாராய் தம்பி[17]

கற்புநிலையினை எடுத்து விளக்க, ஓர் ஆண் புறாவிற்கு ஒரு பெண் புறா என்று புறாவின் வாழ்வில் 'கற்பினை' எடுத்துக் காட்டுகின்றார்.

ஒருபெட்டை தன்ஆண் அன்றி
வேறொன்றுக் குடன்ப டாதாம்;
ஒருபெட்டை மத்தாப் பைப்போல்
ஒளிபுரிந் திட நின் றாலும்
திரும்பியும் பார்ப்ப தில்லை —
வேறொரு சேவல்! தம்மில்
ஒருபுறா இறந்திட் டால்தான்
ஒன்றுமற் றொன்றை நாடும்.[18]

பெண் கல்வி

முகத்தில் உள்ள இரண்டு கண்களும் இப்போது நிகழ்கின்றவைகளையும் இங்கே உள்ளவைகளையும் மட்டும் காணமுடி

16. மே. கா. நூ. ப. 186.
17. அழகின் சிரிப்பு, ப. 6
18. மே. கா. நூ ப 43.

யும். இறந்த காலத்தையும் எதிர்காலத்தையும் காண இந்தக் கண்கள் பயன்படா. இந்த இடம் தவிர, மற்ற நாடுகளை இங்கிருந்தே காண்பதற்கும் இந்தக் கண்கள் பயன்படா. எல்லாக் காலங்களையும் எல்லா நாடுகளையும் ஆராய்ந்து காண்பதற்குப் பயன்படும் கண் கல்விக்கண்ணே. ஆகவே, கற்றோரே கண்ணுடையவர்கள் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்[19]

கல்வி என்பது இருபாலாருக்கும் பொதுவானதே நாட்டின் முன்னேற்றமும், வீட்டின் முன்னேற்றமும் பானை பிடித்தவள் கையில் உள்ளது. அவள் கல்வி அறிவு இல்லாதவளாக இருந்தால், சிறந்த குடும்பமாகவும் அமையாது; நல்ல குழந்தைகளும் அங்கு பிறக்காது.

படியாத பெண்ணினால் தீமை ![20]

என்றும்,

கல்வி இல்லா 'மின்னாளை'
வாழ்வில் என்றும்
மின்னாள் என்றே உரைப்போன்[21]

என்றும்,

மகளிரெலாம் கல்வியறி (வு)
ஒழுக்கமுள ராயின்
மருத்துவமே வேண்டாவாம்;
பிணிமூப்பு வாரா !

என்றும் குறிக்கின்றார்.[22]

கல்வியில்லாத பெண்களைக் களர் நிலத்துக்கு ஒப்பிட்டுக் கூறுகின்றார். பள்ளிக்குச் செல்லாத குழந்தைக்குக் கூறும் அறிவுரையில் கல்வியின் இன்றியமையாமை-பெண் கல்வியினை வலி

19. திருக்குறள், 393.
20. குடும்பவிளக்கு.
21. மே. கா. நூ. ப. 76.
22. மே. கா. நூ. ப. 200

யுறுத்துகின்றார். எல்லாச் செல்வங்களையும் வழங்கிடும் கல்விச் செல்வம் இல்லாத வீட்டை இருண்ட வீடு என்றே கவிஞர் கூறுகின்றார்.

கல்வியில் லாத பெண்கள் களர்நிலம்!
அந்நிலத்தில்
புல் விளைந்திடலாம் நல்ல புதல்வர்கள் விளைதல்
இல்லை!
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி,
அங்கே
நல்லறி வுடைய மக்கள் விளைவது நவிலவே
நான்[23]

மேலும்,

எல்லா நலமும் ஈந்திடும் கல்வி
இல்லா வீட்டை இருண்டவீ டென்க[24]

என்றும், நாட்டின் முன்னேற்றம் பெண் கல்வியால்தான் என்றும் கவிஞர் உள்ளம் கூறுகின்றது.

பெண்களால் முன்னேறக் கூடும்; — நம்
வண்தமிழ் நாடும்![25]

பெண்களுக்கு உரிமை வேண்டும் கல்வி கற்க என்பதனை வலியுறுத்துகின்றார்:

கல்வியில்லை உரிமையில்லை,
பெண்களுக்கு
கடைத்தேற வழியின்றி
விழிக்கின் றார்கள்![26]

பெண்ணடிமை

பாரதிதாசன் சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் பெண்ணடிமையினை வன்மையாகக் கண்டிக்கின்றார்

23 குடும்ப விளக்கு, ப 69, 70.
24. இருண்ட வீடு.
25. மே. கா. நா.
26. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப. 105.

பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே[27]

என இளவஞ்சி வாயிலாகப் பெண்ணடிமைக்கு எதிராக போர்க் கொடி உயர்த்திச் சமுதாயப் புரட்சியில் தம்முடைய கருத்து விதைகளைக் கவனமாக ஊன்றி வைக்கிறார்.

மணவாளன் பெறும் ஒழுங்கு அனைத்தும் மனைவியாலே ஆகும்; வாழ்க்கையினைச் செம்மையாக நடத்த உதவுமவள் என்று சிறப்பிக்கின்றார் கவிஞர் :

உவந்தொருவன் வாழ்க்கை சரியாய் நடத்த
உதவுமவள் பெரும்பாலும் மனைவி ஆவாள்
அவளாலே மணவாளன் ஒழுங்கு பெற்றான்[28]

கலப்பு மணம்

சமுதாயத்தில் சாதிபேதமும் சமய வாதமும் ஒழிய வேண்டுமெனில் காதல் மணமும் கலப்பு மணமும் பல்கிப் பெருக வேண்டும். மக்களுக்குள் உயர்வு தாழ்வு பேசும் மடமையினை ஒழிப்பதற்கு ஒரே வழி கலப்பு மணந்தான் என்பதனை நன்கு உணர்ந்தவர் பாரதிதாசன்.

காட்டோமே சாதி மணம்! கலப்பு மணம் ஒன்றே
நல்வழிக்குக் கைகாட்டி[29]

என்று தன் உள்ளக் கருத்தினை வெளிப்படுத்துகின்றார்.

'புரட்சிக் கவி' காவியத்தில் புவியாளும் மன்னன் மகளுக்கும் எளிய குடிமகனான கவிஞன் ஒருவனுக்கும் கலப்பு மணம் செய்து வைக்கிறார் பாரதிதாசன். இளவரசி அமுதவல்லியிடம்,

அன்றியும் என் காதல் அமுதே! நமதுள்ளம்
ஒன்றுபட்ட பின்னர் உயர்வென்ன தாழ்வென்ன?[30]

என்று அந்தக் கவிக்காதலன் கூறுவதாகப் பாடுகிறார்.

---

27. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி. ப. 30.
28. குடும்பவிளக்கு.
29. பாரதிதாசன் கவிதைகள் மூன்றாம் தொகுதி, ப. 86.
30. மே. கா நூ முதல் தொகுதி. ப. 25.

மறுமணம்

கணவனை இழந்த பெண் மறுமணம் செய்து கொள்ள வேண்டும்; அது அவளுக்கு நல்லது என்று வலியுறுத்திக் கூறுகின்றார்.

மறுமணம் புரிவதால் வராதொரு கேடும்
மறுமணமிலாத பெண் கூடுவதும் கூடும்[31]

கிழமணம்

கிழமணத்தினைக் கவிஞர் கடுமையாகச் சாடுகின்றார்:

மண்ணாய்ப் போக மண்ணாய்ப் போக
மனம்பொருந்தா மணம் மண்ணாய்ப் போக[32]

பதிவு மணம் - மணம் முறிவு

மேலை நாடுகளில் மலிந்துள்ள மணம் முறிவினைப் புரட்சிக் கவிஞர்:

பதிவு மணம் காணல் கடனாகும், காதல்
உடையார்தம் வாழ்வில் உளம்வேறு பட்டால்
மடவார் பிறனை மணக்க விடவேண்டும்[33]

என்றும் கூறுகின்றார்! இதன் மூலம் மணவிலக்குச் செய்து கொண்டு, மறுமணம் செய்து கொள்ளலாம் என்கிறார்.

கைம்பெண்

கணவன் இறந்தவுடன் இளம் மனைவியின் ஏக்கமும் இறந்து விடுமா? என்பது அவர் எழுப்பும் வினா.

மாலையிட்ட மணவாளன் இறந்து விட்டால்
மங்கை நல்லாள் என்ன செய்வாள் - அவளை
நீங்கள்
ஆலையிட்ட கரும்பாக்கி உலக இன்பம்

---

31. பாரதிதாசன்: தேனருவி-பாடல், ப 54.
32. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப. 111.
33. குடும்பவிளக்கு, ப. 64.

அணுவளவும் அடையாமல் சாகச் செய்தீர்[34]

என்று கைம்மை நிலைக்கு இரங்கிப் பாடுகிருர். மேலும்,

கோரிக்கை யற்றுக் கிடக்கு தண்ணே - இங்கு
வேரில் பழுத்த பலா[35]

என்று கைம்பெண்ணுக்கு வேரில் பழுத்த பலாவின் உவமை காட்டி நம் உள்ளத்தை நெகிழ வைக்கிருர்.

ஓடப்பர் உதையப்பர்

ஓடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொ டிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார்[36]

இது - பாரதிதாசன் அவர்களை அறியாதாரும் பாடும் பாடல். உழைக்கின்றவர்கள் உரிய முறையில் உயிரெனக் காக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தும் அவருடைய பெருமூச்சாகும்.

பகுத்தறிவுப் புரட்சி

கவிஞரின் உள்ளம் பல துறைகளிலும் புதுமையைப், புரட்சியை விரும்புகிறது. ஏனெனில்,

இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின் ருனே!
மருட்டுகின்ற மதத்தலைவர் வாழுகின் ருரே!
வாயடியும் கையடியும் மறைவ தென்நாள்?[37]

பொதுவுடைமைக் கருத்தினைக் கொண்ட கவிஞர் இந்த நாடு அனைவருக்கும் உரியது; உடைமைகளும் அனைவருக்கும் ஆகுக என்று பொதுவுடைமையினைச் சிறப்பிக்கின்ருர்.

---

34 பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப. 120.
35. மே. கா. நூ. ப, 106.
36. மே. கா. நூ ப. 148.
37. பாண்டியன் பரிசு, ப, 99

எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமைஎலாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக![38]

குடும்பக் கட்டுப்பாடு

பெற்ற குழந்தைக்குப் பால் கொடுக்கத் தயங்கிக் கூலி பேசித் தாயமர்த்தும் இற்றை நாள் அன்னையர் குடும்ப விளக்கின் 'மக்கட் பேறு' என்ற பகுதியை அவசியம் படித்தறிதல் வேண்டும். தாய்மையிலே கிடைக்கும் அன்பு ஈடு இணையற்றது; அதனை மறந்தவர்கள் அன்பினை மறந்தவர்களாவர்; ஆயின் கவிஞர் பெண்களை மனித உற்பத்தி செய்யும் எந்திரமாகக் கருதவில்லை. காலத்திற்கேற்பக் கருத்தடை பற்றியும் பேசுகிறார்.

வேண்டும் அளவே
  விளைத்து, மேல் — வேண்டாக்கால்
சேர்க்கை ஒழித்துக்
  கருத்தடையேனும் செய்க[39]

என்று கூறுகின்ற கவிஞர், 'அளவோடு பெற்று வளமோடு வாழ்க,' 'இரண்டிற்குமேல் எப்போதும் வேண்டாம்' என்று அரசு கூறி வருகின்ற குடும்பக் கட்டுப் பாட்டினை மனத்தில் வைத்து எதிர் நோக்கிய இந்தப் புரட்சிகரமான கருத்தினை 1938-ஆம் ஆண்டிலேயே குரல் கொடுத்து வைத்தார் போலும்!

---

38. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி, ப. 50
39. குடும்பவிளக்கு, ப. 65

தொட்டில் இலக்கியம்

எஸ். ஆரோக்கிய நாதன், எம்.ஏ,

மைசூர் - 6

அமிழ்தினும் இனிய செந்தமிழ் மொழியில் கவிதை இலக்கியம் வளத்தோடு பன்னெடுங்காலந் தொட்டு வளர்ந்து வந்துள்ளது இலக்கண வரம்பிற்கும் சந்த ஓசை நயத்திற்கும் உட்பட்டு கவிதை இலக்கியம் வற்ருத வளத்தோடு எல்லாத் துறைகளிலும் வளர்ந்து நிற்கிறது. பிறந்தவுடன் தொட்டிலிலிட்டு கண் உறங்க தாய் பாடும் தாலாட்டுப் பாடல் தொடங்கி, காலச்சக்கரத்தின் சுழற்சியில் சிக்கி இடுகாட்டிற்குப் போகும் இறுதி நேரத்தின் போது அழுகின்ற அவலப்பாடல் முதல் வாழ்வின் பல நிலைகளிலும் நம் முன்னோர்கள் தம் மனதை கவிதை உணர்வால் தாக்கி கவிதைகளை வெளிக்கொணர்ந்து இலக்கிய வளத்தை வளர்த்து வந்துள்ளார்கள் பிள்ளையினை உறங்க வைக்க தொட்டிலினை ஆட்டிவிட்டு தாய் பாடும் தாலாட்டுப் பாடல் மற்ற பாடல்களைப் போலவே இலக்கியச் சுவையும், இலக்கியத்தரமும் பெற்று உயர்ந்து விளங்குகிறது. தாலாட்டுப் பாடல்கள் நமக்கு வழங்கும் செய்திகள் பலப்பல. அவைகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வீட்டிலிருக்கும் போது. மழலைச் செல்வத்தை தாய் உறங்க வைக்க பொதுவாக தொட்டிலில் இட்டு தாலாட்டுப்பாடி உறங்க வைப்பது பண்டைய வழக்கமாகும், தன்மடிமீதோ அன்றி தோள் மீதோ வைத்து உறங்க வைப்பதும் உண்டு. ‘‘அத்தை மடி மீதும், மாமன் தோள் மீதும்’’ மழலை உறங்குவதுண்டு உழவு வேலை முதலியவற்றில் ஈடுபட்டிருக்கின்ற தாய்மார்களின் பிள்ளைச் செல்வங்கள் மரக்கிளைகளில் துணியால் தற்காலிகமாக கட்டப்பெறும் ஏணைகளில் உறங்குவதும் உண்டு. எறும்பு போன்ற சிறு பூச்சிகள் குழந்தையினைக் கடித்திடாது இருக்கவும், குழந்தையின் பச்சை உடம்பு காற்றுக்கு அதிகம் ஆட்படாது இருக்கவும், குழந்தையினை அமைத்து ஆட்டிட வசதியாக இருக்கவுமே இந்த தொட்டில், ஏணை முதலியன பயன்பட்டன. வீட்டில் தொட்டில் அமைக்கப்பெறுவதிலும் சில முறைகள் கையாளப்பட்டுள்ளன. காற்று அதிகம் வாராத இடமாகப்பார்த்து தொட்டில்கள் அமைக்கப்பட்டன.

" காற்றடிக்கா மூலையிலே
கதவோரம் தொட்டிகட்டி "
" காற்றடியா மூலையிலே — என்
கண்ணே உங்களப்பா
கருணருக்கு தொட்டிகட்டி "

எனும் வரிகள் இதனை விளக்கும், தொட்டிலின் அமைப்புத் தரமும் குடும்பத்தின் பொருளாதார வசதிக்கேற்ப இருக்கும். தொட்டிலில் அலங்காரங்களும் விளையாட்டுப் பொருட்களும் பொருத்தப்பட்டிருக்கும்.

" ஆடுதாம் இரண்டு கிளி
அவனுடும் தொட்டிலிலே "

எனும் வரிகள் இதனை உணர்த்தும்

" பச்சை இலுப்பை வெட்டி
பால்வடியத் தொட்டி கட்டி "
" புளிய மரத்தில் தொட்டில் செய்து
புங்க மரத்தில் தொட்டில் செய்து "

என்பன போன்ற தாலாட்டுப் பாடல் வரிகள் பல் வகை மரங்களால் தொட்டில் செய்யப்படுகின்றன என்பதையும்,

" ஆனை முகத் தொட்டிலிலே
அசைந்தாட வந்தவனே "

என்பதால் பல்வேறு வடிவ அமைப்புகளில் தொட்டில்கள் செய்யப்படுவதையும் நாம் அறிகிறோம். மழலையினை தொட்டிலில் போட்டு தாய் தான் தொட்டிலை ஆட்ட வேண்டும் என்பது அவசியமில்லை. வசதிமிக்க குடும்பத்தில் குழந்தையினை பராமரிக்க - கண்காணிக்க அமர்த்தப்பட்டிருக்கும் செவிலியர்கள் - தாதியர்கள் கூட தொட்டிலினை ஆட்டிடுவர். அதனுல் தான் ஒரு தாய்,

" ஆட்டுங்கடி தாதியரே,
அன்னக்கிளி கண்ணுறங்க
ஊட்டுங்கடி பாலை
உறக்கம் வரும் வரை "

என தன் தாலாட்டுப் பாடலில் கூறுகிருள். உறங்கவைக்க தொட்டிலில் இடு முன் குழந்தையினை குளிப்பாட்டி தலை வாரி பூச்சூடி, மையெழுதி பாலூட்டி விடுவதுண்டு. இதனை

"தூங்காத கண்ணுக்கு
துரும்புகிள்ளி மையெழுதி
உறங்காத கண்ணுக்கு
ஓலைகிள்ளி மையெழுதி"

என கவி நயத்தோடு தாயொருத்தி தாலாட்டுப் பாடுகிருள் பெற்றெடுத்த மழலைச் செல்வத்தால் இப்போது மனமகிழ்ந்திருக் கும் தாய், இப்பிள்ளைச் செல்வத்தை பெறுதற்கு முன்னர் தனக் கிருந்த நிலையினை எண்ணிப் பார்க்கிருள். மணமாகி பிள்ளை யின்றி நாள் கடந்து போனதால் ஊரார்கள் வாய் கூசாமல் 'மலடி' என்று தன்னைக் கூறியதை நினைத்து குமுறுகிருள். அதனை இப்போது தாயான மகிழ்வில், இலை மறைக்காயாக இலக்கிய நயத்தோடும் உவமைச் சிறப்போடும் தாலாட்டுப் பாடலில் தாய் பாடுகிருள்.

"முள்ளில்லா முருங்கை யென்று
முளைக்காது என்றுங்க
முருகன் கிருபை யாலே
முளைத்து வந்த ரத்தினமே"
"இலை தீர்ந்து கொடி வாடி
இல்லையென்று போமிடத்தில்
சரகுதிர்ந்து பழம் பழுத்த
ஜாதிப் பலாப் பழமோ"
"இருஞ்சி இஞ்சியென
எல்லையெங்கும் ஏசினர்கள்
இஞ்சி கலிதீர்க்க
....

இருவாட்சி கோலொடித்து
எருதோட்ட வந்த கண்ணே;"

என வரும் வரிகள் இலக்கிய வளத்திற்கும் மறைபொருளால் கருத்துணர்த்தும் சிறப்பான நலத்திற்கும் சான்றுகளாகும். ஒவ்வொரு தாய்க்கும் தான் பெற்ற பிள்ளையே உயர்வும் சிறப்பும்

உடையதாகும். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு அல்லவா அதனால் தான்,

" அரசே உனை வேண்டி
ஆடாத தீர்த்த மில்லை
பொருளே உனை வேண்டி
போகாத கோயி லில்லை "

என்றும்,

" முருகனைத்துதித்து
முன்னூறு நாள் தவமிருந்து
பாசத்தால் உதித்த பசுமலரே
கண்ணுறங்கு. "

என்றும் தாய் தாலாட்டுப் பாடுகிறாள். தவமிருந்து தாய் ஓர் தவப்புதல்வனைப் பெற்று விடுகிறாள் உடனே பிள்ளைக்கலி தீர்க்க பிறந்து விட்ட பாலகனால் மகிழ்ந்த தந்தை,

" பார்ப்பான் அழையுமென்றார் — கண்ணனுக்கு
பஞ்சாகம் பார்க்கச் சொன்னார்
தட்டான் அழையுமென்றார் — கண்ணனுக்கு
பட்டறை வையுமென்றார். "

தான் தவமிருந்து பெற்ற பிள்ளைக்கு வருங்காலத்தில் வரப் போகும் சிறப்பினை, புகழினை, பாராட்டினை கற்பனையில் எண்ணிப் பார்த்து மகிழ்கிறாள். தன் குலம் தழைக்க வந்த கோமகனை காணுகிறாள் ஒரு தாய்.

" முப்பாட்டன் ஆண்ட
மூகப்பும் தலைக் கடையும்
தப்பாமல் ஆளத்
தவம் பெற்று வந்தவனோ "

என்று பாடுகிறாள். வேறொரு தாய், தந்தையின் தொழிலை சிறப்போடு செய்யவே மகனாய் பிறந்தான் என்பதால்

" வடக்கே வெகுதூரம் — என் கண்ணே
உங்க அப்பாவுக்கு

வாழத்தோப்பு சொந்தத்தோப்பு — அந்த
வாழைப்பழம் ஏலமிட — என் கண்ணே நீ
வர்த்தகனாய்ப் பிறந்தவனோ ?"

என்று பாடுகிறாள். வேறு சில தாய்மார்கள் தாங்கள் பெற்ற பிள்ளைகளை, வீரனாய், பொன் இறகு பிடித்து, துரைமார்களிடம் கணக்கு எழுதும் கணக்கராய், உயர்பதவி வகிக்கும் அதிகாரியாய். கற்றறிந்து சபையினில் வாதிடும் வக்கீலாய், அறிஞனாய், கவிஞனாய் கற்பனையில் கண்டு மகிழ்கிறார்கள். தாலாட்டுப் பாடல்கள் குழந்தையினைக் கண்ணுறங்க வைக்கப்பாடப்படுவது தான். ஆனால் பாடுகின்ற தாயின் மனப்போக்கிற்கு ஏற்ப அதன் பொருள் இருக்கும். தொட்டிலை அசைத்தபடியே பாடுவதால் தனக்கும் அலுப்பின்றி இருக்கவே பாட்டின் கருப்பொருள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கலாம். தாய் வீட்டுப் பெருமையினை பேசுவது எந்த பெண்ணுக்கும் அலுப்புத்தட்டாத ஒன்றாகும் பிறந்தகத்து பெருமையினை. புகுந்தகத்திலிருந்து கொண்டு நேரடியாக பேசித்திரிவது சிறப்பாக அமையாது என்பதால் மறைமுகமாக வெளியிட்டு மகிழ்ந்திட மனந்துடிக்கும். தான் பெற்ற மழலைக்கு தாய் மாமன் சீர் தருகின்ற சிறப்பினை சொல்வதாக தாலாட்டுப் பாடலில் மறைமுகமாக தாய் வீட்டு பெருமை பாடி மகிழ்வடைகிறாள்.

"ஏலக் காய்க்கு
இலை நாலு பிஞ்சு வரும்
சாதிக் காய் சிறக்கும் — உன்
தாய் மாமன் வாசலிலே"

என்று தாய் மாமன் வீட்டுப் பெருமையினைப் பாடுகிறாள்.

"தங்கத்தால் காகிதமாம்
தனித்தெழுதும் பேனாவாம்
பேனாபிடித் தெழுதும்
பெரியதுரை உன்மாமன்"

என்று மாமன் தகுதியினைக் கூறுகிறாள்.

"கண்ணுக்கோர் கண்ணாடி
காலுக்கோர் வீரத்தண்டை
வீரத்தண்டை செய்துவரும்
வீரரோ உங்களம்மான்"

என்றும்,

" சங்கினுல் பால் கொடுத்தால்
சந்தனவாய் நோகு மென்று
தங்கத்தால் சங்கு செய்து
தருவாருன் மாமன் "

என்றும் தாய் மாமன் தன் மகனுக்கு செய்திட இருக்கும் சீர்களையும் சிறப்புகளையும் பாடுகிருள். தாய் மாமன் பெருமையினை மட்டுமே தாய் பாடுவதாக நாம் குறை கூறி விடமுடியாது முப்பாட்டன் பெருமையினையும் தந்தை பெருமையினையும் தாராளமாக பாடி மகிழ்கிருள். இத்தாலாட்டுப் பாடல்கள் உயர்வும் செல்வச் சிறப்பும் மிகுந்தவர்களின் தனிச் சொத்தாக இருந்திடவில்லை. அதனுல் தான், தொட்டில் இலக்கியம் வறுமைத்துயரை படம் பிடித்துக்காட்டுகின்ற சிறந்த இலக்கிய நயமிகு தாலாட்டுப் பாடல்களையும் கொண்டிருக்கிறது. அப்பாடல்கள் நம் உள்ளத்தைத் தொட்டு நெகிழவைக்கத் தவறுவதில்லை,

" பசும் பால் கொடுத்து உன்னைப்
பாதுகாக்கப் பார்த்தாலும்
பசும் பால் இல்லையடா
....
பிள்ளைப்பால் கொடுத்துனக்கு
போஷணைகள் செய்திடவே
கொள்ளையடித்தப் பஞ்சத்தினுல்
குரங்காகி போனேனடா
பச்சரிசிச் சோறும்
பாதி நாள் பட்டினியும்
லஜ்ஜை கெட்டு வாழுறப்போ
லெட்சுமணன் வந்து பிறந்தாயோ ? "

என்றும்

" சேலைக் கடைக்காரன்
சிலுக்குச் சட்டை போட்டிருக்க
ஏழைக் குடிசையிலே
ஏன் பிறந்தாய் செல்ல முத்தே "

என்றும் பாடி தன் சோகக் கதையினை சொற் சித்திரமாக வடித்து வைக்கிருள் கண்ணீர் மல்க அந்த செல்வ மகனைப் பெற்றெடுத்த ஏழைத்தாய்.

தொட்டிலில் போட்டு ஆட்டி தாலாட்டுப் பாடியபோதும் குழந்தை தூங்காது அழுவதும் உண்டு. "அழாதே" எனக்கூறி கொஞ்சிப்பார்க்கிருள். அழுகை நிற்கவில்லை, பசியால் அழுகிறது என நினைத்து நிலவைக்காட்டி விளையாட வைத்து பால் சோறு ஊட்டி உறங்க வைக்கிருள் ஒரு தாய்,
இன்னொரு தாயோ,

"கடலை வறுத்துத் தரேன்
கட்டியப்பம் சுட்டுத் தரேன்
பொறியும் பொறித்துத் தரேன்
பொரிவிளங்காய் பிடித்துத் தரேன்
சீடை முறுக்குத் தரேன்
செல்வா நீ தூங்கு தூங்கு"

என்று உண்பதற்கு பல உணவுப் பண்டங்களைத் தருவதாக ஆசை காட்டி உறங்க வைக்கிருள். இவ்வாறு ஆசை காட்டிய பின்னரும் குழந்தை அழுவதால் அழுகையின் காரணத்தை ஆராய முற்படுகிருள் ஒரு தாய் யாராவது அடித்தார்களோ?. அதனை,

"அடித்தாரை சொல்லியழு
ஆக்கினைகள் செய்திடுவோம்
தொட்டாரை சொல்லியழு
தோள்விலங்கு பூட்டிடுவோம்
அத்தை அடித்தாளோ
அலரிப்பூ செண்டாலே
மாமன் அடித்தானோ
மைதீட்டும் கையாலே
பாட்டி அடித்தாளோ
பாலூட்டும் சங்காலே
சித்தி அடித்தாளோ
செண்பகப்பூ செண்டாலே"

என்று மழலை அழுத காரணத்தை கேட்கிருள் ஒரு தாய். இலக்கிய நயமிகு தாலாட்டுப் பாடல்களில் உவமைச் சிறப்புகள் மிக அழகாக அமைந்துள்ளன.

"கண்ணே கமலப்பூ — உன்
கண்ணிரண்டும் பாதிரிப்பூ"
"ஏனழுதாய் ஏனழுதாய்
ஏலம்பூ கண் சிவக்க"

எனும் இவை போன்று தாலாட்டுப் பாடல்களில் அமைந்துள்ள ஏராளமான வரிகள் நயமான உவமைச் சிறப்பிற்கு அருமையான சான்றுகளாம்.

கடவுள் பெருமைகளும், ஊர் தெய்வங்களின் சிறப்பும் திருவிழா நிகழ்ச்சிகளும் தாலாட்டுப் பாடல்களின் கருப்பொருளாக அமைவது உண்டு. வள்ளிக்கதையும், இராமாயணக் கதையும் கூட தாலாட்டுப் பாடல்களில் உள்ளன. இவ்வாறு அமைகின்ற கருப்பொருள்களிலிருந்து எப்பகுதியினைச் சார்ந்த பாடல்கள் என்பதனை அறிந்திட இயலும். தாலாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் பேச்சுத் தமிழால் தான் அமைந்துள்ளன.

" தோய்ச்ச தயிருந்தரேன் " - எனும் வரியும், " அதட்டி தொறக்க - நீ அதிகாரி பிறந்தாயோ ", "தங்கம் நறுக்கி - மறுவாட்டாம் தூண் நிறுத்தி " எனும் வரிகளும் பேச்சுத் தமிழ் வழக்கிற்கு சான்றுகளாகும். இப்பேச்சுத் தமிழ் தாலாட்டுப் பாடல்களிலிருந்து அவைகள் எந்த வகுப்பாரின் கிளை மொழி (caste - dialect) என்பதனையும் நாம் உணர இயலும்
சான்றாக,

" தோப்பனார் ஆண்ட
தோப்புத் துரவுகளை
தாயாதி ஆளாதே
தானாள வந்தானோ "

எனும் பாடல் வரிகளிலிருந்து அந்தணர் வழக்கிற்குரிய தாலாட்டுப் பாடல் இது என அறியலாம் தாலாட்டுப் பாடல்கள் செவி வழிச் செய்தியாகவும், தாய்மார்களின் மனப்பாடத் திறமையிலும் நின்று நிலவி வந்த காரணத்தால் பாடபேதத்திற்கும் உட்பட்டுள்ளன. மேலும் காலப்போக்கில் பழையன மறந்து மறைந்து போவதற்கும் புதியன புகுத்தப்படுவதற்கும் நிறைய வாய்ப்புகள் உள்ளன

" தித்திக்கும் தேனும்
தினைமாவும் கொண்டுதான்
அம்மான் வருவார் "

எனும் வரிகளில் நாம் சங்ககாலப் பாடல்களின் சாயலைப் பார்க்க முடிகிறது.

"ஏசு துணையிருக்கும் — என் அம்மானுக்கு
என் ஏசு காவலுண்டு
தாய் மேரியும் சூசையப்பர் — என் அம்மானுக்கு
தஞ்சமும் காவலுண்டு"

எனும் பாடல்கள் பிற்காலத்தவை என்பதனை நாம் எளிதில் அறிந்திட முடிகிறது. இவ்வாறு தாலாட்டுப் பாடல்கள் கால சுழற்சியில் மறைந்தும், மாறியும், விரிந்தும் இருந்தும் இலக்கியச் சுவையோடு திகழ்ந்து விளங்குகிறது. இத்தாலாட்டுப் பாடல்களில் ஆண் மகனுக்கும் பெண் மகளுக்கும் தனித்தனியா அமைந்துள்ளன மிகக்குறைவே அதிலும், எங்கெல்லாம் ஆண் பால் விகுதியுள்ளதோ அவைகள் பெண் பால் விகுதியாக மாற்றப்பட்டு பெரும்பாலான பாடல்கள் உள்ளன (வந்தானே —> வந்தாளோ) குலத்தொழில் புரிய வந்த குலக் கொழுந்தாக, வீரனாக, அதிகாரியாக ஆண் மகவைத் தாலாட்டுப் பாடும் பாடல்கள் உள்ளன. பெண் மகவிற்கு இவைகள் இயலாது என்பதால் இலக்குமியாய் சீதையாய், வள்ளியாய் புகழ்ந்து பாடுகின்ற பாடல்கள் உள்ளன. இத் தாலாட்டுப் பாடல்களின் வாக்கிய அமைப்புகள் மொழியியலாரின் ஆய்வுக்கு உட்படுதல் வேண்டும்

காலக் கொடுவினைக்கு ஆளாகியும் சேதப்பட்டும், சிதைந்தும், போய் விட்டாலும் இன்றும் கிராமப்புறத் தாய்மார்களின் நாவில் இத் தொட்டில் இலக்கியம் இசையோடு வளர்ந்து வருகிறது. இவ் விலக்கியம் மேலும் சிதைவுறுது பாதுகாத்து எழுத்து வடிவிற்கு கொண்டு வந்திடுவது நம் தமிழன்னைக்கு நாம் புரிகின்ற தொண்டாகும்.

குறிப்பு :— திரு. ஆறு. அழகப்பன் அவர்கள் தொகுத்து வெளியிட்டுள்ள "தாலாட்டுக்கள் ஐநூறு" எனும் நூலில் உள்ள பாடல்களே இக் கட்டுரையின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. தாலாட்டுப் பாடல்களை தொகுத்து வெளியிட்டுள்ள திரு. ஆறு. அழகப்பன் அவர்களுக்கு நன்றி.

தமிழில் தாவரம் ★

Dr கு சீநிவாசன்.
M. Sc., Ph. D; F. B. B. S. (Lond) M. I. A. B. (utrt)
துணைப் பேராசிரியர்.
தாவர இயல் அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

நெய்தல்

தமிழ்நிலம் மருதம், நெய்தல், முல்லை, குறிஞ்சி என நான்கு வகைப்படும். முல்லையுங் குறிஞ்சியும் தம்மியல் திரிந்து இயைந்த நிலத்தைப் பாலை என்பர், நெய்தல் நிலமென்பது கடலும் கடலைச் சார்ந்த இடமுமாகும். மற்று நெய்தல் ஒழுக்கமாவது இரங்கலும், இரங்கல் நிமித்தமும் பற்றியது. கடலைச்சார்ந்த உப்பங் கழியிலும், நல்லநீர் நிலைகளிலும் நெய்தற் செடி வளரும். இதனையுட்கொண்டு இந் நிலத்தை நெய்தல் நிலம் என்றனர் போலும். இக்கருத்து பழந்தமிழ் இலக்கண உரையில் நிலவியுள்ளது பண்டைத் தமிழ் புலவர்கள் இந்நெய்தற் செடி, இதன் பெயரால் அமைந்த நிலம் பறை ஒழுக்கம் ஆகியவற்றைச் சிறப்பித்துப் பாடியுள்ளனர். அகநானூற்றில் மட்டும் 10, 20, 30 என்று இவ்வாறு வரும் பத்துப் பத்தான எண்களை உடைய பாக்கள் நெய்தல் திணைக்கு உரியன.

அன்றி ஊழி, நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம், கமலம் வெள்ளம் என்ற சொற்கள் பேர் எண்களைக் குறிப்பதைப் பரிபாடல் கூறும்

.. ..அவற்றிற்கும்
உள்ளீடாகிய இருநிலத்து ஊழியும்
நெய்தலும் குவளையும் ஆப்பலும் சங்கமும்
மைஇல் கமலமும் வெள்ளமும் நுதலிய
செய்குழி ஈட்டம் கழிப்பிய வழிமுறை
பரிபாடல் — 2 : — 12 — 15

நெய்தற் செடியைப் பற்றி, பண்டைத் தமிழிலக்கியமும், தாவர இயலும் பேசுவனவற்றைச் சிறிது சிந்திப்போம்.

★ இத்தொடரில் இவ்வாசிரியர் எழுதிய குறிஞ்சியைப் பற்றிய கட்டுரையைத் தமிழ்ப் பொழில் துணர் 34, மலர் 11 (1959 பிப்ரவரி — மார்ச்) 313—316 பக்கங்களில் காணலாம்.

நெய்தல் என்னும் நீர்க்கொடி, தாமரை, ஆம்பல், குவளை, நீலம், கொட்டி முதலியவற்றுடன் சேர்ந்தும், தனித்தும் நல்ல நீர் நிலைகளிலும் சிற்றருவியிலும் உப்பங்கழியிலும் வளரும் இயல்புடையது பகைவர்களால் அழிக்கப்பட்ட நெல் வயல்களிலும் நெய்தல் வளர்வதுண்டு வடித்தெடுத்த வேல் முனைப் பகுதி (இலை) வடிவான பசிய இலைகளை உடையது தண்ணிய நீர் நிலைகளில் சேற்றில் புதைந்திருக்கும் கிழங்கிலிருந்து இலைகள் வளர்ந்து நீண்ட காம்புகளினால் மேல் எழும்பி நீரில் மிதக்கும். விழாக் காலத்து விழவணி மகளிர் இதனுடைய இலைகளை ஆம்பல் இலைகளுடன் சேர்த்துத் தழையணி செய்வர்.

கொற்கை முன்றுறைச் சிறுபாசடைய
செப்பு ஊர்நெய்தல் தெண்ணீர்மலரின்
தொலைந்த கண்ணே — நற் — 23
ஒண்ணுதல் மகளிர் ஓங்குகழிக்குற்ற
கண்ணேர் ஒப்பின் கமழ்நறு நெய்தல் —நற்—283
அருவி ஆம்பல் நெய்தலொடு —பதிற்—71
வள்ளிதழ்த் தாமரை நெய்தலொடு —பதிற்—78
மைபடு மலர்க்கழி மலர்ந்த நெய்தல் —பதிற்—64
நீர்ச் செறுவின் நீள் நெய்தல்
பூச் சாம்பும் புலத்து ஆங்கண் —பட்டின—11—12
மா இதழ்க்குவளையொடு நெய்தலும் மயங்கி
—பட்டின—241

கள்கமழும் நறுநெய்தல் வள்ளிதழ்
அவிழ்நீலம் —மதுரைக்—250

வெண்காற் செறுவில் மையென விரிந்த
நீள்நறுநெய்தல் —மலை—124—125

பாசடைக் கலித்த கணைக்கால் நெய்தல்
விழவு அணிமகளிர் தழையணிக்கூட்டும்
—அகம்—70 : 11—12

கொண்டைக் கூழைத் தண்தழைக் கடைசியர்
சிறுமாண் நெய்தல் ஆம்பலொடு கட்டும்
—புறம்—61

கொடுங் கழி நிவந்த நெடுங்கால் நெய்தல்
அம்பகை நெறித்தழை அணிபெறத்தைஇ —நற் 96

நெய்தற்பூ நீலநிறமும் நறுமணமும் உடையது. அகன்று நீண்ட இதழ்களை உடையது. பூ நீலமணி போன்றதெனவும், கண் போன்றதெனவும் நெடுநேரம் கனையாடிக் கயம் மூழ்கும்

மகளிரின் உள்ளகம் சிவந்த கண்களைப் போன்றதெனவும் கூறுவர்.

நீல்நறு நெய்தல் —நற்—382; புறம்—144
மணிமருள் நெய்தல் —மதுரை—282
கணைத்த நெய்தல் கண்போல் மாமலர் —அகம்—150
மணிக்கலத்தன்ன மாஇதழ் நெய்தல் —பதிற்—30
சிறுகரு நெய்தல் கண்போல் மாமலர் —அகம்—230
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
கயம்மூழ்கு மகளிர் கண்ணின் மானும் —குறுந்—9

திருமணத்தை இடைவைத்துப் பொருள் தேடச்சென்ற தலைவன் குறித்த பருவத்தில் வரவில்லை. அதனால் தலைவி வருந்திக்கொண்டிருக்கிறாள். தலைவன் வரைவொடு வருகின்ற குறிப்பறிந்த தோழி தலைவியை நோக்கிச் சொல்கிறாள், "நமது கழியின் கண்ணே தலைவன் நிதியுடன் வருகின்ற தேரின் ஒலியைக் கேட்பாயாக" என்று. இதனை நற்றிணைப் புலவர் ஒருவர் நெய்தல் திணையில் ஒரு காட்சியினைச் சித்தரிக்கின்றார். உப்பங்கழி (Back waters) யில் நீர் தேங்கி நிற்கிறது. நீர தண்மையாக உள்ளது. அதில் சுறு மீன்கள் திரிகின்றன நெய்தல் வளர்ந்து பூத்துள்ளது மலர்கள் நீலமணி போன்று விரிந்துள்ளன உப்பங்கழியின் கரையோரத்திலே புன்னைமரமும் பூத்திருக்கிறது புன்னையின் பூக்கள் தமது பொன்நிறமான தாதுக்களை நெய்தல் மலர்மேல் நிறையும் படியாகத் தூவுகின்றன. அக்கானலிடத்தே வீழ் ஊன்றிய அடியையுடைய தாழையின் மலர் மணங்கமழும். இருங்கழியின் நெய்தல் மலர் நிறைய நுண்ணியதாதை புன்னை பரப்பா நிற்குமென்றது, "சேரியிடத்து நமர் கையேற்ப நிரம்பிய பொற்குவியலைச் சேர்ப்பன் நம்மை வரைதற் பொருட்டுக்கொடா நிற்பன்," என இப்பாடற்பகுதியில் நல்லதொரு இறைச்சிப் பொருள் காணக் கிடக்கின்றது. அன்றியும், தாழம்பூவின் மணம் கானல் எங்கும் கமழுமென்றது, "நின் வரைவு நாடெங்கும் மாட்சிமைப் படு" மென்ற மற்றொரு இறைச்சிப் பொருளையும் காணலாம்.

கோட்சுறு வழங்கும் வான்கேழ் இருங்கழி
மணிஏர் நெய்தல் மாமலர் நிறையப்
பொன்னேர் நுண்தாது புன்னை தூஉம்
வீழ்த்தாள் தாழைப் பூக்கமழ் கானல் —நற்—78

மேலும் இன்னொரு காட்சியை நற்றிணைப் புலவர் ஒருவர் காட்டுகிருர். தலைவனுடன் தனது களவு ஒழுக்கத்தை அறிந்து ஊர் தூற்றுமாயின் தன்னை வீட்டிலே செறித்து வைப்பார்களே என்று தலைவி அஞ்சி வருந்துகிருள். அவளை தேற்றுவதற்குத் தோழி சொல்கிருள், "நினது காதலனது நீர்த்துறையில் நெய்தல் பூத்துள்ளது கரை ஓரமாகப் பனைமரம் பழுத்திருக்கிறது. தேன் போலு இனிக்கும் அதனுடைய பழம் நெய்தற் பூவின் மேலே விழுகிறது நெய்தல் பூவும் மொட்டுகளும் சிதைந்து போகின்றன. விழுந்த வேகத்தில் பனம் பழம் சேற்றில் ஆழ்கின்றது. இவ்வோசைக்கு அஞ்சிக் குருகினம் இரிந்து ஓடுகின்றது இத்துறைவனுடன் நினது களவு ஒழுக்கத்தையறியாத இவ்வூர். நீ ஏதோ அன்னைதந்த கோல் ஒடிந்ததற்கு உளைகிருய் என்று பிறழ உணர்ந்துளது ஆதலின் உன்னை இற்செறிக்க மாட்டார்கள் மனம் அழியாதே" என்று. இவர்கள் உரையாடலைத் தலைவன் சிறை வேலியின் புறமாகக் கேட்டுக் கொண்டிருக்கிருன்.

கானல் பெண்ணைத்தேனுடையளி பழம்
வள்ளிதழ் நெய்தல் வருந்த மூக்குஇறுபு
அள்ளல் இருஞ்சேற்று ஞூழல் பட்டென
கிளைக்குருகு இரியும் துறைவன்...... ......
....
கண்டல் வேலிக் கழிநல்லூரே —நற்—372

இப்பாட்டில் வரும் காட்சியில் ஓர் இனிய உள்ளுறை உவமங் காணலாம் பனம் பழம் நெய்தல் வருந்த சேற்றில் விழக்கண்டு குருகினம் இரியுமென்றது, "தலைவன் களவொழுக்கம் கெட நின்னை மணப்பின் அலர் வாய்ப்பெண்டிர் இரிந்தொழிவர்" என்பதாம் நெய்தல்பூ விடியற்காலையில் மலரும் எனவும், அதனை நாரை உண்பதும், எருமை மேய்வதுமுண்டு எனவும் மாலையில் பூ கூம்பும் எனவும் கூறுப நெய்தற்பூவிதழ்களுடன் அடும்பின் (அடம்பு) செவ்வியபூக்களை விரவித்தொடுத்து மகளிர் கூந்தலில் அணிவர் நெய்தலின் நறிய மலர்களைச் செருந்திப் பூக்களுடன் விரவி மாலையாகப் புனைந்து ஆடவரும் அணிவர் என்ப. நெய்தற் பூவைப் புறவிதழ் ஒடித்து மாலைகட்டிச் சூடுதலுக்கு "நெய்தல் நெறித்தல்" என்று பெயர்.

தண்புலர்வைகுறு விடியல் போகிய எருமை
நெய்தலம் புதுமலர் மாந்துப் —அகம்—100

முட்டாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ்நெய்தல் ஊதிஎல்படக் (ஞாயிறு தோன்ற)
கண்போல் மலர்ந்த காமரு சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
—திருமுரு—73—76

சுரும்புணமலர்ந்த பெருந்தண் நெய்தல் —அகம்—290

வள்ளிதழ் நெய்தல் கூம்பப்புள்உடன்
கமழ்பூம் பொதும்பர்க் கட்சிசேர
செல்சுடர் மழுங்க —நற்—117

அடும்பின் ஆய்மலர் விரைஇ நெய்தல்
நெடுந் தொடைவேய்ந்த நீர்வார் கூந்தல்
—குறுந்—401

நெய்தல் நறுமலர் செருந்தியொடு விரைஇக்
கைபுனை நறுந்தார் கமழும் மார்பன் —ஐங்குறு—182

நெய்தல்பூ நறுமணமும் தேனும் உடையது வண்டுகளில் ஒருவகையான சுரும்பு. தேன் உண்ணும் பொருட்டு பெரியதும் தண்ணியதுமான நெய்தற்பூ மலரும் என்கிறார் நக்கீரர் சாகுந்தல நாடகத்தொடக்கத்திலே அதன் ஆசிரியர் பாடினி வாயிலாக இயற்கை எழிலைப் புலப்படுத்துகின்றார். ஆசிரியர் மலையடிகள் அந்த சுலோகத்தைச் செய்யுளாக மொழி பெயர்க்கிறார்.

"விரியும் மணம் அவிழ்க்கும் மலர் முகிழ் மேல் எல்லாம்
கரியவரிவண்டு முத்தமிடல் காணாய்" — என்று

சிலமலர்களின் இதழ்கள் திருகு அமைப்பு (Twisted aestivation) உடையன. இவற்றின் அரும்புகள் மலராகி விரிவதற்கு. இதழ் களின் திருகி அமைந்துள்ள அதன் முறுக்கு (பிரிய) அவிழ வேண்டும். அப்போதுதான் மலரின் மணத்தை நுகர்ந்து அதில் மதுவுண்ண வந்துள்ள வண்டுகள் மலர் முகிழ்மேல் எல்லாம் முத்தமிடுகின்றன அதனால் மலர்கள் விரிகின்றன என்பார் ஒருவர் நெய்தல் மலரோ, சுரும்பு மது நுகர்வதற்காக விரியும் என்பார் மற்றொருவர்.

நெய்தல் என்பது எது என்று இந்நாளில் தாவர நூல் புலவர்களும் தமிழ் நூற்புலவர்களும் பெரும் பூசலிடுகின்றனர். ஆசிரியர் நச்சினார்க்கினியர் இதனைத் தெளிவு படுத்தியுள்ளார். அவர் "நீள் நறு நெய்தல்" என்ற குறிஞ்சிப்பாட்டு அடிக்கு நீண்ட நறிய நெய்தற்பூ எனக் கூறினாராயினும் "கட்கமழ்

நெய்தல்'' (குறிஞ்-84) என்பதற்கு தேன் நாறுங் கருங்குவளை என்று உரை கூறியுள்ளார். மேலும் அவர் "தண்கயக்குவளை" (குறிஞ்-63) என்றவிடத்து குளிர்ந்த குளத்திற் பூத்த செங் கழுநீர்ப்பூ என்று உரை சொல்கிறார் ஆகவே நெய்தல் என்பது கருங்குவளை எனவும், குவளை என்பது செங்குவளையாகிய செங் கழுநீர்ப்பூ எனவும் எளிதில் அறியலாம்.

இனி இவற்றுடன் நீலப்பூவும் இணைத்துப் பேசப்படு கின்றது "கட்கமழும் நறுநெய்தல், வள்ளிதழ் அவிழ்நீலம்" (மதுரை-250) என மாங்குடி மருதனார் பாடுதலின் நெய்தல்வேறு, நீலம் வேறு என்பதாயிற்று. "தண்கயக்குவளை நீள் நறு நெய்தல்" (குறிஞ்-79) எனக்கபிலரும் "மாயிதழ்க் குவளையொடு நெய்தலும் மயங்கி" (பட்டின-241) எனக்கடியலூர் உருத்திரங் கண்ணனாரும் கூறுதலின் நெய்தல் வேறு, குவளை வேறு என்பதாயிற்று "அரக்கிதழ்க் குவளையொடு நீலம் நீடி" (பெரும்பா-293) எனக்கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடு தலின குவளை வேறு, நீலம் வேறு என்பதாயிற்று. "நீலமெடு நெய்தல் நிகர்க்கும்" (ஐங்குறு-2) என ஓரம்போகியார் பாடுத லின் நீலம் வேறு என்பதோடன்றி நீலம கருங்குவளை ஆகா மையும் புலனும். "அரக் நீடி" என்ற இப்பெரும்பாணாற் றுப்படை அடிக்கு நச்சினார்க்கினியர் சாதிலிங்கம் போன்ற இதழை உடைய குவளையோடே நீலப்பூவும் வளர்ந்து" என செங்குவளையாக உரை கூறியதற்குக் காரணம் "அரக்கிதழ்க் குவளை என்றதேயாம், மேலும் இவர் "நீலப்பைஞ்சுனை" (திருமுரு-253) என்பதற்கு தருப்பை வளர்ந்த பசிய சுனை என்றாராயினும், பத்துப்பாட்டின் பழைய உரைகாரர் "நீலோற் பல முதலாக உள்ள," என்பார் எனினும் "வள்ளிதழ் அவிழ் நீலம்" (மதுரை-251) என்பதற்கு நச்சினார்க்கினியர் 'பெருமை யுடைய இதழ் விரிந்த நீலப்பூ" எனவே உரைகூறி. "மாயி தழ்க்குவளையொடு நெய்தலும் மயங்கி'. (பட்டி-241) என்ற அடியை, குவளையொடு மாயிதழ் நெய்தலும் மயங்கி எனக் கொண்டு கூட்டி "குவளையோடே பெருமையுடைய இதழ்களை உடைய நெய்தலும்" என உரை வகுத்துள்ளார். எனவே நச்சினார்க்கினியர் குவளையைச் செங்குவளை எனவும், நெய்தலைக் கருங்குவளை எனவும், கொண்டதோடன்றி நீலமென்பது நீலப்பூவெனக் குறிப்பதுடன், நெய்தற்பூவை வள்ளிதழ் நெய்த லெனப் பலரும் பாடுமாறு கண்டு பெருமை உடைய இதழ் களை உடையதாகவே கருதுகின்றார் என்பதும் விளங்கும்.

பத்துப்பாட்டுப் பதிப்பாசிரியர் (1950-பக்கம் 365) பின்வரும் குறிப்பெழுதுகின்றார்: "பெருமை உடைய நீலம் — நெய்தல் நீலம் என்னும் இருவகை மலர்களுள் நீலம் சிறப்புடையதாகலின் இவ்வாறு உரை எழுதினர். "பல்லிதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்" என்ற (ஐங்குறுநூறு - 2 : 4) தற்கு அதன் உரையாசிரியர் சிறப்புடைய கருங்குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் நிகர்க்கும் ஊரனென்றது' என்றெழுதியிருத்தல் இதனை வலியுறுத்தும்." இதனை உற்று நோக்கினால் ஐங்குறுநூற்று உரையாசிரியர் நீலம் என்பதற்குக் கருங்குவளை எனப் பொருள் கண்டதோடமையால் சிறப்புடைய கருங்குவளையுடனே சிறப்பில்லாத நெய்தல் எனவும் சிறப்புரை செய்துள்ளார் என்பது போதரும். ஆதலின் பத்துப்பாட்டுப் பதிப்பாசிரியரும், ஐங்குறுநூற்று உரையாசிரியரும்; ஆசிரியர் நச்சினார்க்கினியர் குவளை, நெய்தல், நீலம் என்ற மலர்களுக்கு எழுதியுள்ள உண்மை உரையினை எங்ஙனம் அறியாராயினர் என்பது தான் விளங்கவில்லை.

ஆகவே குவளை என்பது செங்குவளை எனவும் நீலோற்பலமெனவும், செங்கழுநீர்ப்பூ வெனவும் வழங்கி வந்தது. தில்லையம் பதியில் கோயில் கொண்டுள்ள அம்மை சிவகாம சுந்தரியின் திருக்கரத்தில் சற்று விரிந்த நீலோற்பல மலர் காணப்படுகின்றது. கருங்குவளை என்பது தான் நெய்தல் மலர். செங்குவளையும், கருங்குவளையும், ஆம்பலும் (அல்லி) தாவர இயலில் ஒரே பேரினத்தைச் (Genus) சார்ந்தவை. சிற்றினப் (Species) பெயர்கள் வேறுபடும்.

கருங்குவளையாகிய நெய்தலை, Nymphaea violacea எனவும் செங்குவளையாகிய நீலத்தை Nymphaea stellata எனவும், அல்லியாகிய ஆம்பலை Nymphaea Pubescens எனவும் செவ்வல்லியாகிய அரக்காம்பலை Nymphaea rubra எனவும், நீல அல்லியை Nymphaea ampla எனவும் தாவர நூல் கூறும்.

மற்று ஒரு சிலர் நிறத்தை மட்டுங் கொண்டு நீல அல்லியை கருங்குவளை என்றோ நெய்தலென்றோ, நீலமென்றோ கருதுவதற்கும் இடமுண்டு ஆனால் இவற்றின் இலைவடிவம் வேறுபடுதலின் அங்ஙனம் கொள்ளுதல் கூடாது. கருங்குவளை, செங்குவளை இவற்றின் இலைகள் ஒரே மாதிரியானவை அல்லி இலையினைப் போன்று அடியில் பிளவுபட்டிருக்குமாயினும், அல்லியிலையும், செங்குவளை இலையும ஏறக்குறைய வட்டவடிவானவை

கருங்குவளையாகிய நெய்தல் இலை சற்று நீண்ட முக்கோண வடிவானது சற்று சிறியதாகவும் இருக்கும். இலைகளும் பூக்களும் நீண்ட காம்புகளை உடையன. இலைகள் நீரில் மிதக்கும். நெய்தல் இலையை வடித்தெடுத்த வேல இலைக்கு உவமித்துப் பாடுகின்றார் குடவாயிற் கீரத்தனர் :

நெய்தல் உருவின் ஐது இலங்கு அகல் இலை
தொடையமை பீலிப் பொலிந்த கடிகை
மடையமை திண்சுரை மாக்காழ் வேலொடு

—அகம்—119

இதனுள் கூறிய நெய்தல் இலையின் வடிவம் தாவர நூல் விவரிக்கும் இதன் வடிவுடன் ஒத்துள்ளமை மகிழ்தற்குரியது.

செங்குவளைப்பூவின் இதழ்கள் புறத்தில் நீலமாகவும், அகத்தில் சற்று வெளிர்சிவப்பாகவும இருக்கும் நெய்தல பூவின இதழ்கள் புறத்தும் அகத்தும் கருநீலமாகவே இருக்கும்.

நீல்நிற நெய்தல் நிறையிதழ் பொருந்த

—நற்—382

சிறுகரு நெய்தல் கண்போல் மா மலர்

—அகநா—230

நீல்நறு நெய்தலின் பொலிந்த உண்கண்

—புறநா—144

இதழ்களுக்கு அடியில் உட்புறமாக மகரந்த வட்டத்தைச் சுற்றி தேன் சுரப்பிகள் உள்ளன மலர் விரியும்போது நறுமணம் வெளிப்படும். ஆதலின் “கட்கமழ் நறுநெய்தல்” எனப்பல புலவர்களும் பாடுவாராயினர். நறுமணத்தால் ஈர்க்கப்பட்ட சுரும்பினம் நெய்தலின் மதுவையும் மகரந்தத்தையும் உண்டு மகிழும்.

தொடரும்